# மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் பங்களிப்பு

**R. Pusppam[1*] & P. Sivananthan[2]**

[1]*Faculty of Graduate Studies, University of Jaffna, Sri Lanka*

[2]*Department of Social science, Faculty of Education, University of Colombo, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

தென்மராட்சிக் கிழக்குப் பிரதேச வகை II பாடசாலைகளின் தரம் 10 மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் பங்களிப்பினை பாட உள்ளடக்கம், கற்பித்தல் அணுகுமுறை, இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் ஊடாக கண்டறிவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்லினப் பண்பாட்டுச் சூழலில் மாணவர்களிடையே அண்மைக்காலமாக ஒத்துழைப்பின்மை, வன்முறை, குழு மனப்பான்மை மற்றும் தவறான நடத்தைகள் அதிகரித்துச் செல்வது இங்கு ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. விவரண அளவை நிலை ஆய்வு வடிவத்தையும், தொகைசார் மற்றும் பண்புசார் முறைகளை ஒருங்கிணைத்த கலப்பு ஆய்வு அணுகுமுறையையும் கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தென்மராட்சிக் கிழக்குப் பிரதேசத்தின் தரம் 10 இல் கல்வி கற்கும் 80 மாணவர்கள் முழுவகை மாதிரியாகவும், தரவு முக்கோணப்படுத்தலுக்காக நோக்க மாதிரியெடுப்பு முறையில் 20 குடியியல் பாட ஆசிரியர்களும், ஒன்பது அதிபர்களும் மாதிரிகளாக உள்வாங்கப்பட்டனர். வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் சராசரி, நியம விலகல் மற்றும் கருப்பொருட் பகுப்பாய்வு முறைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வு முடிவுகளின்படி, குடியியற் பாடத்திலுள்ள சட்ட, பண்பாட்டு ரீதியான கடமைகளும் (அடிப்படைக் கடமைகள், உரிமைகளை மதித்தல்), சமூக நிறுவன மற்றும் ஜனநாயக விழுமியங்களும் மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் மிகவும் உயர்வான பங்களிப்பினை ($M$ = 4.21 - 5.00) வழங்கியுள்ளன. மேலும், வகுப்பறைக் கவிநிலையும் பாடத்தின் போதான மதிப்பீடுகளும் உயர் பங்களிப்பை நல்கிய போதிலும், விவாதங்கள் மற்றும் குழு வேலைகள் போன்ற மாணவர் மையக் கற்பித்தல் அணுகுமுறைகள் மிதமான பங்களிப்பையே ($M$ = 2.61 - 3.40) வழங்கியுள்ளன என்பது கண்டறியப்பட்டது. அதேவேளை, மாணவர் நாடாளுமன்றம், சமூக விஞ்ஞானப் போட்டிகள் மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் கோட்பாட்டு ரீதியாக முக்கியத்துவம் பெற்றிருந்தாலும், மாணவர்களின் குறைந்த ஈடுபாடு மற்றும் நடைமுறைச் சவால்கள் காரணமாக ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் போதிய பங்களிப்பை வழங்கவில்லை என அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் நேர்காணல் தரவுகள் புலப்படுத்துகின்றன. எனவே, இலங்கையின் தற்போதைய பரீட்சை மையக் கல்வி முறையினால் குடியியற் பாடம் ஏட்டுக்கல்வியாக மட்டுமே சுருங்கிவிடுவதைத் தடுத்து, விழுமியப் பதிவேட்டு முறை மற்றும் செயல்முறைச் செயல்பாடுகள் மூலம் அதனை ஒரு சமூக நிறுவனக் கற்றலாக மாற்றுவதற்குக் கலைத்திட்ட மறுசீரமைப்பை மேற்கொள்வது இன்றியமையாதது என இவ்வாய்வு இறுதி முடிவு செய்கின்றது.

**முதன்மைப் பதங்கள்** : சமூக சகவாழ்வு, குடியியற் பாடம், கற்பித்தல் அணுகுமுறை, மாணவர்கள்

*rpushpam27@gmail.com*

R. Pusppam: https://orcid.org/0009-0009-6670-4530

P. Sivananthan: https://orcid.org/0009-0001-4758-7940

**அறிமுகம்**

சமூக சகவாழ்வு என்பது பன்மைச் சமூகத்தில் தனி நபர்கள் ஒருவரை ஒருவர் மதித்து, முரண்பாடுகளை அமைதியாகத் தீர்த்து பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழ்தல் ஆகும் (Delors, 1996). ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அவசியமான அடித்தளப் பரிமாணங்களில் ஒன்று சமூக சகவாழ்வு ஆகும் (Durkheim, 1964). சமுதாயத்தில் ஒற்றுமை, சகிப்புத்தன்மை, பொறுமை, பண்பாடு, சட்ட நம்பிக்கை, ஜனநாயகப் பங்களிப்பு ஆகியன சமூக சகவாழ்வின் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. நிலையான சமாதானம் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதற்குச் சமூகப் பிணைப்பு மற்றும் சகவாழ்வு ஆகியவை அத்தியாவசியமான முன்நிபந்தனைகள் ஆகும் (UNDP, 2023).

பல்லின கலாசாரத்தை உடைய இலங்கையில் சமூக சகவாழ்வு என்பது தேசிய அபிவிருத்திக்கு வித்திடுகின்ற ஓர் எண்ணக்கருவாக உள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் போருக்கான முக்கிய காரணங்களில் ஒன்று சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுடன், இனங்களுக்கிடையே நிலவிய நம்பிக்கையின்மை மற்றும் பரஸ்பர மரியாதை இன்மையாகும் (சமூக நீதி மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு, 2011). மேலும் ஒரு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சமூக நல்லிணக்கம் இருக்கும்போது மட்டுமே அந்நிய முதலீடுகள் அதிகரிக்கும் (World Bank, 2021). இன மற்றும் மத ரீதியான பாகுபாடுகளால் ஒரு நாட்டின் மனித உரிமைகள் மீறப்படுவதோடு சமூகங்களுக்கிடையே பிளவுகளும் ஏற்படுகின்றன (UNHRC, 2023). எனவே சமூக சகவாழ்வு என்னும் எண்ணக்கருவினை இலங்கை போன்ற பல் பண்பாட்டு நாடுகளில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் மதித்துச் செயற்படுகின்ற போது நிலையான அபிவிருத்தியினை ஏற்படுத்த முடியும்.

பாடசாலைகள் சமூக நிறுவனங்களாகத் திகழ்வதால் சமூக நீதியையும், ஜனநாயக விழுமியங்களையும் பேணும் நற்பிரஜைகளை உருவாக்குவதில் கலைத்திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. ஒற்றுமை, சகவாழ்வு, நல்லிணக்கம் ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் நிலைபேறான சமாதானத்தை எட்டுவதற்காகக் குடியியற் கல்வியானது முக்கிய பங்காற்றுகின்றது (NCERT, 2016). இந்நிலையில், குடியியல் பாடம் என்பது மாணவர்களின் பொறுப்புணர்வையும், அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் முக்கியத்துவத்தையும், சமூகத்தில் ஒற்றுமையாக வாழ்வதற்கான நெறிமுறைகளையும் எடுத்துரைக்கின்றது. மாணவர்கள் சமுதாயத்தில் கடமைகள், உரிமைகள், சட்டம், அரசியல் அமைப்புகள், குடிமைப் பொறுப்புகள் போன்ற கருத்துக்களைப் பற்றி ஆழமாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகிறது.

தென்மராட்சியின் கிழக்குப் பிரதேசமானது பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் கலாசார வேறுபாடுகளைக் கொண்டது. இவ் வேறுபாடுகளினடிப்படையில் அங்குள்ள மக்களிடையே முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. இங்குள்ள பாடசாலைகளும் இப் பின்னணிகளிலிருந்து வரும் மாணவர்களுக்கு கல்வியை வழங்கி வருகின்றன. எனவே ஒற்றுமையை வளர்க்க வேண்டுமாயின் முதலில் மாணவர்களிடத்தே சமூக சகவாழ்வை வளர்க்க வேண்டும். இப் பின்னணியிலேயே சமூக சகவாழ்வை

வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் பங்களிப்பு எனும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கமும் குறிக்கோள்களும்**

***ஆய்வின் நோக்கம்***

தென்மராட்சிக் கிழக்குப் பிரதேச வகை II பாடசாலைகளின் தரம் 10 மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் பங்களிப்பினை பாட உள்ளடக்கம், கற்பித்தல் அணுகுமுறை, இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் ஊடாக கண்டறிதல்.

***ஆய்வுக் குறிக்கோள்கள்***

1. மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாட விடயங்களின் பங்களிப்பினை இனங்காணல்.
2. மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் ஆசிரியர்கள் பின்பற்றும் கற்பித்தல் அணுகுமுறையின் பங்களிப்பினைக் கண்டறிதல்.
3. மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்துடன் தொடர்புடைய இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் பங்களிப்பினைக் கண்டறிதல்.

**இலக்கிய மீளாய்வு**

குடியியற் கல்வி என்பது வெறும் சட்டங்களைப் போதிப்பது மட்டுமல்ல அது வன்முறையற்ற கலாசாரத்தை உருவாக்குகின்றது. மோதல்கள் ஏற்படும் போது அதனை ஆயுதங்கள் அல்லது அதிகாரத்தின் மூலம் தீர்க்காமல் உரையாடல் மூலம் தீர்க்கும் திறனை மாணவர்களிடம் வளர்க்கின்றது (UNESCO, 2015). சமூக சகவாழ்வு என்பது ஒரு பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தில் உள்ள பல்வேறு இன, மத, கலாசாரக் குழுக்கள் பரஸ்பர மரியாதை மற்றும் புரிந்துணர்வுடன் வாழ்வதைக் குறிக்கும். கல்வி என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். இலங்கையில் 2009 ற்குப் பிந்திய சூழலில் சமூகங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைப்பதில் குடியியற் பாடம் முக்கிய பங்காற்றுகிறது (Lewin, 2021).

குடியியல் பாடப்புத்தகங்கள் கோட்பாட்டு ரீதியாகச் சிறப்பாக இருந்தாலும் பாடசாலைச் சூழலில் கற்பிப்பதிலும் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும பெரும் சவாலாக அமையலாம். சமூக சகவாழ்வு முழுமையாக மலர வேண்டும் எனில் குடியியல் கல்வி வகுப்பறையுடன் மாத்திரம் நின்று விடாமல் சமூக சேவை சார்ந்த கற்றலாக மாற வேண்டும் (Subramaniam, 2024). சட்ட ரீதியான கடமைகளைக் கற்பிப்பதன் மூலம் பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தில் சகிப்புத்தன்மை மற்றும் சகோதரத்துவம் என்பன வளர்க்கப்படுகின்றன (Kamlasi & Kusdarini, 2022).

தொடர்புத் திறன், பண்பாட்டு விழிப்புணர்வு மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய தனிப்பட்ட ஆற்றல் பல் பண்பாட்டுச் சமூகங்களில் அமைதியான வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகின்றது. இத்தகைய ஆற்றல்களை வளர்க்க முக்கிய பாடமாகக் குடியியற் கல்வி அடையாளம் காணப்படுகிறது (OECD, 2011).

**ஆய்வு முறையியல்**

மாணவர்களின் சமூக சகவாழ்வு சார்ந்த மாறியாகவும் குடியியற் பாட விடயங்கள், அப் பாட ஆசிரியர்களின் கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் அப் பாடம் சார்ந்த இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் சாரா மாறிகளாகவும் கொள்ளப்பட்டு, அவை எவ்வாறு மாணவர்களின் சமூக சகவாழ்வை வளர்ப்பதில் பங்களிக்கின்றன என்பது தொடர்பாக கண்டறிந்து விபரிக்கும் நோக்குடன் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இது விபரண அளவைநிலை ஆய்வு வடிவத்தில் அமைந்துள்ளது. அத்துடன் இந்த ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ள தொகை ரீதியான தரவுகளும் பண்புசார் தரவுகளும் பெறப்பட்டு தரவுகளின் தன்மைக்கு ஏற்ப அவை பொருத்தமான நுட்ப முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. எனவே தொகை மற்றும் பண்பு சார்ந்த கலப்பு ஆய்வு அணுகு முறையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள, வகை II ஐச் சேர்ந்த ஒன்பது பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப் பாடசாலைகளில் 10 ஆந் தரத்தில் 80 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்கள் அனைவரும் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இப் பாடசாலைகளில் குடியியற் பாடம் கற்பிக்கும் 20 ஆசிரியர்கள் மற்றும் ஒன்பது அதிபர்கள் நோக்க மாதிரியெடுப்பு முறையில் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். வினாக்கொத்து மற்றும் நேர்காணல் ஆகிய தரவு சேகரிப்புக் கருவிகள் மூலம் பெறப்பட்ட தொகை ரீதியான தரவுகள் விபரணப் புள்ளிவிபர முறையில் அமைந்த சராசரி மற்றும் நியமவிலகல் மூலமும் பண்பு சார்ந்த தரவுகள் கருப்பொருட் பகுப்பாய்வு முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

ஆய்வுக் குறிக்கோள்களின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகள் கீழ்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. கீழ்வரும் அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு பல்வேறு சமூக விஞ்ஞான மற்றும் கல்வியியல் ஆய்வுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற நியமங்களுக்கு ஏற்ப சராசரி மற்றும் நியம விலகல் பெறுமதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1**

*சராசரி மற்றும் நியம விலகல் பெறுமதிகளுக்கான நியமங்கள்*

| சராசரி (*M*) பெறுமதிக்கான விளக்கம் | | நியம விலகல் (*SD*) பெறுமதிக்கான விளக்கம் | |
|---|---|---|---|
| *M* | விளக்கம் | *SD* | விளக்கம் |
| 1.00 – 1.80 | மிகவும் குறைவு | 0.00 – 0.50 | மிகவும் ஒருமித்த கருத்து |
| 1.81 – 2.60 | குறைவு | | |
| 2.61 – 3.40 | மிதமானது | 0.51 – 1.00 | ஒருமித்த கருத்து |
| 3.41 – 4.20 | உயர்வு | 1.01 மேல் | கருத்து வேறுபாடு அதிகம் |
| 4.21 – 5.00 | மிகவும் உயர்வு | | |

நேர்காணல் மூலம் பெறப்பட்ட பண்பு சார்ந்த தரவுகள் கருப்பொருட் பகுப்பாய்வு முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

***மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாட விடயங்களின் பங்களிப்பு***

இக் குறிக்கோளானது 16 மாறிகள் மூலம் அளவிடப்பட்டு நான்கு உபதலைப்புக்களின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இம் மாறிகள் தொடர்பாக ஆசிரியர்களிடமிருந்து மட்டுமே தரவுகள் பெறப்பட்டுள்ளன. ஏனெனில் குடியியற் பாடத்திலுள்ள விடயங்கள் எவ்வாறு சமூக சகவாழ்வை வளர்க்கின்றன என்பது தொடர்பாக மாணவர்களிற்குப் போதிய விளக்கமின்மையால் ஆகும். இத் தரவுகள் விவரணப் புள்ளி விபர முறையை பயன்படுத்தி (சராசரி, நியம விலகல்) பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழ்வருமாறு அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**

*சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்திலுள்ள சட்ட மற்றும் பண்பாட்டு ரீதியான கடமைகளின் பங்களிப்பு*

| மாறிகள் | ஆசிரியர்களின் துலங்கல்கள் | | |
|---|---|---|---|
| **சட்ட ரீதியான கடமைகள்** | *N* | *M* | *SD* |
| அடிப்படைக் கடமைகள் மற்றும் ஏனையவர்களின் உரிமைகளை மதித்தல் | *20* | *5.00* | *0.01* |
| பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தலும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயற்படலும் | *20* | *4.95* | *0.22* |
| பாடசாலைச் சட்டங்கள் மற்றும் ஒழுக்கக் கோவைகளைப் பின்பற்றலும் சமூகத்தில் சிறந்த குடிமகனாக வாழ வழி வகுத்தலும் | *20* | *4.70* | *0.47* |
| தனியாளாகவும் சமூகத்துடனும் இணைந்து சூழலைப் பாதுகாப்பதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தல் | *20* | *4.65* | *0.49* |

| | | | |
|---|---|---|---|
| **பண்பாட்டு ரீதியான கடமைகள்** | | | |
| கலாசார விழுமியங்களை மதித்தலும் இன நல்லிணக்கத்திற்கு உதவுதலும் | *20* | *4.65* | *0.49* |
| ஏனைய மொழிகளை மதிப்பதனூடாகச் சிறந்த குடிமகனாக வாழுதல் | *20* | *4.55* | *0.50* |
| தனது பாரம்பரியங்களைப் போல் பிறரின் பாரம்பரியங்களையும் மதித்தல் | *20* | *4.70* | *0.47* |
| ஒழுக்கத்தைப் பேணுவதனூடாகப் பிறருடன் இணைந்து வாழல் | *20* | *4.80* | *0.41* |

சட்ட ரீதியான கடமைகள் தொடர்பான நான்கு மாறிகளுக்கு ஆசிரியர்கள் வழங்கிய துலங்கல்களிடையேயான நியமவிலகல் ($SD$ = 0.00 – 0.50) என்பதாக உள்ளதால் அநேகமான ஆசிரியர்களின் கருத்துக்கள் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம் மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது ($M$ = 4.21 - 5.00) என்பதாகக் காணப்படுகின்றது. இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. எனவே மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்திலுள்ள சட்ட ரீதியான கடமைகளின் பங்களிப்பு மிகவும் உயர்வான பங்களிப்பை வழங்கியுள்ளமையினைத் தரவுகள் வெளிப்டுத்தியுள்ளன.

அதேபோன்று பண்பாட்டு ரீதியான கடமைகள் தொடர்பான நான்கு மாறிகளுக்கு ஆசிரியர்கள் வழங்கிய துலங்கல்களின் நியமவிலகல் ($SD$ = 0.00 - 0.50) என்பதாக உள்ளதால் ஆசிரியர்களின் கருத்துக்கள் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம் மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது ($M$ = 4.21 - 5.00) என்பதாகக் காணப்படுகின்றது. இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. எனவே மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்திலுள்ள பண்பாட்டு ரீதியான கடமைகளின் பங்களிப்பு மிகவும் உயர்வான பங்கிப்பை வழங்கியுள்ளமையினைத் தரவுகள் வெளிப்டுத்தியுள்ளன.

**அட்டவணை 3**

*சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்திலுள்ள சமூக நிறுவன மற்றும் ஜனநாயக விழுமியங்களின் பங்களிப்பு*

| மாறிகள் | ஆசிரியர்களின் துலங்கல்கள் | | |
|---|---|---|---|
| **சமூக நிறுவன ரீதியான கடமைகள்** | *N* | *M* | *SD* |
| கூட்டுக் குடும்பமாக வாழ்வதன் மூலம் சமூக சகவாழ்வை ஏற்படுத்தல் | *20* | *4.23* | *0.02* |
| பாடசாலையில் பிற மத மாணவர்களுடன் இணைந்து செயற்படுதல் | *20* | *4.72* | *0.42* |
| உள்ளூராட்சி மன்றத்தின் சேவைகள் பாகுபாடின்றி வழங்கப்படுதல் | *20* | *4.45* | *0.39* |
| நீதிமன்றம் போன்ற சட்ட நிறுவனங்கள் ஊடாக அனைவருக்கும் சமனான நீதியை வழங்குதல் | *20* | *4.65* | *0.27* |

| | | | |
|---|---|---|---|
| **ஜனநாயக விழுமியங்கள்** | | | |
| கருத்துச் சுதந்திரம் | *20* | *4.41* | *0.31* |
| சட்டத்தின் முன் அனைவரும் சமம் | *20* | *4.32* | *0.47* |
| முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்தல் | *20* | *4.65* | *0.38* |
| பங்கேற்புத் தீர்மானமெடுத்தல் | *20* | *4.59* | *0.23* |

சமூக நிறுவன ரீதியான கடமைகள் நான்கு மாறிகள் மூலம் அளவிடப்பட்டுள்ளன. இம் மாறிகளுக்கு ஆசிரியர்கள் வழங்கிய துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.02 - 0.50) என்பதாக உள்ளதால் ஆசிரியர்களின் கருத்துக்கள் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம்மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது (*M* = 4.21 -5.00) என்பதாகக் காணப்படுகின்றது. இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. எனவே மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்திலுள்ள சமூக நிறுவன ரீதியான கடமைகளின் பங்களிப்பு மிகவும் உயர்வான பங்கிப்பை வழங்கியுள்ளமையினைத் தரவுகள் வெளிப்டுத்தியுள்ளன.

அவ்வாறே ஜனநாயக விழுமிய ரீதியான கடமைகள் நான்கு மாறிகள் மூலம் அளவிடப்பட்டுள்ளன. இம் மாறிகளுக்கு ஆசிரியர்கள் வழங்கிய துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.00 - 0.50) என்பதாக உள்ளதால் ஆசிரியர்களின் கருத்துக்கள் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம் மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது (*M* = 4.21 - 5.00) என்பதாகக் காணப்படுகின்றது. இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. எனவே மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்திலுள்ள ஜனநாயக விழுமிய ரீதியான கடமைகளின் பங்களிப்பு மிகவும் உயர்வான பங்கிப்பை வழங்கியுள்ளமையினைத் தரவுகள் வெளிப்டுத்தியுள்ளன.

***மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் ஆசிரியர்கள் பின்பற்றும் கற்பித்தல் அணுகுமுறையின் பங்களிப்பு***

இக் குறிக்கோளானது 10 மாறிகள் மூலம் லைக்கேட் தர நிலையில் அளவிடப்பட்டுப் மூன்று உபதலைப்புக்களின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்பட்டுள்ளது. இம்மாறிகள் தொடர்பாக 80 மாணவர்கள் மற்றும் 20 ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் விவரணப்புள்ளி விபர முறையைப் பயன்படுத்தி (சராசரி, நியம விலகல்) பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழ்வருமாறு அட்டவணை 4 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4**

*மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில்க் குடியியல்ப் பாடம் நடைபெறும் வகுப்பறைக் கவிநிலையின் பங்களிப்பு*

| மாறிகள் | மாணவர்களின் துலங்கல்கள் | | | ஆசிரியர்களின் துலங்கல்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | *N* | *M* | *SD* | *N* | *M* | *SD* |
| *V1* | 80 | 4.69 | 0.49 | 20 | 4.85 | 0.37 |
| *V2* | 80 | 4.71 | 0.28 | 20 | 4.70 | 0.47 |
| *V3* | 80 | 4.55 | 0.31 | 20 | 4.70 | 0.26 |

மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடம் நடைபெறும் வகுப்பறைக் கவிநிலையின் பங்களிப்பு என்பது *(V1)* - வகுப்பறைச் செயற்பாடுகள் ஜனநாயக ரீதியில் இடம்பெறுதல், *(V2)* - ஒத்துழைப்புச் செயற்பாட்டிற்கு அதிக முக்கியத்துவமளித்தல், *(V3)* - ஏனைய மாணவர்களின் தனித்துவத்தைப் புரிந்து கொள்ளல் ஆகிய மாறிகள் மூலம் அளவீடு செய்து காட்டப்பட்டுள்ளன.

இம்மாறிகளுக்கான மாணவர்களது துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.00 - 0.50) என்பதாக உள்ளதால் மாணவர்களது கருத்துக்கள் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம்மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது (*M* = 4.21 - 5.00) என்பதாகக் காணப்படுவதால் இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறே ஆசிரியர்களது துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.00 - 0.50) என்பதாக உள்ளதால் ஆசிரியர்களது கருத்துக்கள் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம் மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது (*M* = 4.21 - 5.00) என்பதாகக் காணப்படுவதால் இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

மொத்தத்தில், *V1*, *V2* மற்றும் *V3* ஆகிய மூன்று மாறிகளிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் உயர்ந்த மட்டத்திலான துலங்கல்களைக் கொண்டுள்ளனர். குறிப்பாக, *V1* மற்றும் *V3* மாறிகளில் ஆசிரியர்களின் சராசரி பெறுமானம் மாணவர்களின் சராசரியை விட உயர்வாகக் காணப்படுகின்றது. *V2* மாறியில் இரு குழுக்களினதும் துலங்கல்கள் பெருமளவில் ஒத்ததாகக் காணப்படுகின்றன. இப்பெறுபேறுகள், ஆய்வுக்குட்பட்ட விடயங்கள் தொடர்பாக மாணவர்களும் ஆசிரியர்களும் நேர்மறையான மற்றும் உயர்ந்த நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன.

எனவே மாணவர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்களின் சராசரி மற்றும் நியமவிலகல் அடிப்படையில் மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடம் நடைபெறும் வகுப்பறைக் கவிநிலையின் பங்களிப்பு மிகவும் உயர்வான பங்களிப்பை வழங்கியுள்ளமை வெளிப்டுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 5**

*மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் மாணவர் மையக் கற்பித்தலின் பங்களிப்பு*

| மாறிகள் | மாணவர்களின் துலங்கல்கள் | | | ஆசிரியர்களின் துலங்கல்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | *N* | *M* | *SD* | *N* | *M* | *SD* |
| V4 | 80 | 3.05 | 0.84 | 20 | 3.40 | 0.72 |
| V5 | 80 | 3.13 | 0.75 | 20 | 3.05 | 0.65 |
| V6 | 80 | 2.68 | 0.79 | 20 | 3.35 | 0.81 |
| V7 | 80 | 2.72 | 0.67 | 20 | 3.25 | 0.64 |

அட்டவணை 5 இன்படி, மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் மாணவர் மையக் கற்பித்தலின் பங்களிப்பு என்பது குழு வேலைகளில் ஈடுபடுத்தல் *(V4)*, விவாதங்களில் பங்கேற்றல் (*V5*), பாத்திரமேற்று நடித்தல் *(V6)*, கருத்தரங்குகள் மற்றும் களப் பயணங்களை மேற்கொள்ளல் *(V7)* ஆகிய மாறிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இம்மாறிகளுக்கான மாணவர்களது துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.51 - 1.00) என்பதாக உள்ளதால் மாணவர்களது கருத்துக்கள் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம்மாறிகளுக்கான மாணவர்களது துலங்கல்களின் சராசரிப் பெறுமதியானது (*M* = 2.61 - 3.40) என்பதாகக் காணப்படுவதால் இது மிதமான பங்களிப்பு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறே ஆசிரியர்களது துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.51 - 1.00) என்பதாக உள்ளதால் அவர்களது கருத்துக்கள் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம்மாறிகளுக்கான அவர்களது துலங்கல்களின் சராசரிப் பெறுமதியானது (*M* = 2.61 - 3.40) என்பதாகக் காணப்படுவதால் இது மிதமான பங்களிப்பு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

எனவே மாணவர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்களின் சராசரி மற்றும் நியமவிலகல் அடிப்படையில் மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் மாணவர் மையக் கற்பித்தலின் பங்களிப்பு என்பது மிதமான பங்களிப்பினை வழங்கியுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 6**

*மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில்க் குடியியற் பாடத்தின் போது இடம்பெறும் மதிப்பீடுகளின் பங்களிப்பு*

| மாறிகள் | மாணவர்களின் துலங்கல்கள் | | | ஆசிரியர்களின் துலங்கல்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | *N* | *M* | *SD* | *N* | *M* | *SD* |
| V8 | 80 | 4.29 | 0.69 | 20 | 4.05 | 0.75 |
| V9 | 80 | 4.37 | 0.78 | 20 | 3.90 | 0.72 |
| V10 | 80 | 4.31 | 0.67 | 20 | 3.80 | 0.62 |

மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் போது இடம்பெறும் மதிப்பீடுகளின் பங்களிப்பு என்பது பிறருடன் இணைந்து செயற்படுவதை மதிப்பிடுதல் *(V8)*, பிற மாணவர்களுக்கு உதவுதலை மதிப்பிடுதல் *(V9*), தவறுகளைத் திருத்த வழிப்படுத்துவதனை மதிப்பிடுதல் *(V10)* ஆகிய மாறிகள் மூலம் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மாறிகளுக்கான மாணவர்களது துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.51 - 1.00) என்பதாக உள்ளதால் மாணவர்களது கருத்துக்கள் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம்மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது (*M* = 4.21 - 5.00) என்பதாகக் காணப்படுவதால் இது மிகவும் உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறே ஆசிரியர்களது துலங்கல்களின் நியமவிலகல் (*SD* = 0.51 - 1.00) என்பதாக உள்ளதால் ஆசிரியர்களது கருத்துக்கள் ஒருமித்துக் காணப்படுகின்றன. அதேவேளை அம் மாறிகளுக்கான சராசரிப் பெறுமதியானது (*M* = 3.41 - 4.20) என்பதாகக் காணப்படுவதால் இது உயர்வு என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

எனவே மாணவர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்களின் சராசரி மற்றும் நியமவிலகல் அடிப்படையில் மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் போது இடம்பெறும் மதிப்பீடுகளின் பங்களிப்பு என்பது உயர்வான பங்களிப்பை வழங்கியுள்ளமை வெளிப்டுத்தப்பட்டுள்ளது.

***மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்துடன் தொடர்புடைய இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் பங்களிப்பு***

மாணவர்களின் சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்துடன் தொடர்புடைய பல்வேறு இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே இச் செயற்பாடுகளின் பங்களிப்பினைக் கண்டறிவதற்காக 80 ஆசிரியர்கள் மற்றும் 20 அதிபர்களுடன் மேற்கொண்ட நேர்காணல் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தரவுகள் பின்வருமாறு கருப்பொருட் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன. இங்கு கருப்பொருட்களாக மாணவர் பாராளுமன்றம், சமூக விஞ்ஞானப் போட்டிகள், விவாத மற்றும் பேச்சுப் போட்டிகள், நல்லிணக்கத்துடன்

தொடர்புடைய தேசிய விழாக்கள், சர்வதேச தினங்கள் என்பவற்றுடன் கல்விச் சுற்றுலா ஆகியன அடிப்படையாகக் கொள்ளப்பட்டன.

**அட்டவணை 7**

*சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்துடன் தொடர்புடைய இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் பங்களிப்பு*

| இல. | கருப்பொருள் | துணைக் கருப்பொருள் |
|---|---|---|
| 1. | மாணவர் பாராளுமன்றம் | ஜனநாயகப் பங்கேற்பு, பொறுப்புணர்வு, கருத்து மதிப்பு |
| 2. | சமூக விஞ்ஞானப் போட்டிகள் | சகிப்புத்தன்மை, சமூக உறவு, கருத்துப் பரிமாற்றம் |
| 3. | விவாத மற்றும் பேச்சுப் போட்டிகள் | தன்னம்பிக்கை, சமூக விழிப்புணர்வு, பிரச்சினை தீர்க்கும் திறன் |
| 4. | தேசிய விழாக்கள் மற்றும் சர்வதேச தினங்கள் | சமூக நல்லிணக்கம், பண்பாட்டு புரிதல், ஒற்றுமை |
| 5. | கல்விச் சுற்றுலா | ஒத்துழைப்பு, பண்பாட்டு அனுபவம், சமூக இணைவு |

கருப்பொருளாக ‘‘மாணவர் பாராளுமன்றம்’’ என்பது காணப்பட்டது. இதன் துணைக் கருப்பொருள்களாக ஜனநாயகப் பங்கேற்பு, பொறுப்புணர்வு மற்றும் கருத்து மதிப்பு என்பன காணப்பட்டன. மாணவர் பாராளுமன்றமானது சமூக சகவாழ்வுக்கு அவசியமானது என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக ஜனநாயக ரீதியான தேர்தலில் பங்கெடுத்தல், பிறர் கருத்துக்களை நிதானமாக எதிர்கொள்ளல், பிறருடன் விட்டுக் கொடுப்புடன் செயற்படுதல், கூட்டுப் பொறுப்புணர்வுடன் செயற்படுதல் ஆகியன மாணவர்களிடம் வளர்க்கப்படுவதாக அதிகளவான அதிபர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. ஆயினும் மாணவர் பாராளுமன்றமானது தொடர்ச்சியாக நடைபெறுவதில் பல்வேறு சவால்கள் எதிர்நோக்கப்படுவதாக அவர்களின் துலங்கல்கள் காணப்பட்டன. எனவே மாணவர் பாராளுமன்றமானது சமூக சகவாழ்வுக்கு அவசியமானதாக இருந்த போதும் ஆய்வுப் பிரதேசத்தில் அதனை வினைத்திறனாகச் செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் மாணவர்களிடையே சமூக சகவாழ்வினை வளர்ப்பதில் அவை போதிய பங்களிப்புச் செய்யவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது (அட்டவணை 7).

இரண்டாவது கருப்பொருளாக ‘‘சமூக விஞ்ஞானப் போட்டிகள்’’ என்பது காணப்பட்டது. இதன் துணைக் கருப்பொருள்களாக சகிப்புத் தன்மை, சமூக உறவு, கருத்துப் பரிமாற்றம் என்பன காணப்பட்டன. சமூக விஞ்ஞானப் போட்டிகள் சமூக சகவாழ்வுக்கு அவசியமானது என்ற அடிப்படையில் வெற்றி தோல்விகளை ஏற்கும் மனப்பாங்கை விருத்தி செய்தல், பிற மதத்தவர்களுடன் ஆரோக்கியமான உறவை விருத்தி செய்தல், கருத்து முரண்பாடுகளைத் தவிர்த்தல், பிறர் கருத்துக்களைச் செவிமடுத்தல் ஆகியன மாணவர்களிடம் வளர்க்கப்படுவதாக அதிபர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஆயினும் சமூக விஞ்ஞானப் போட்டிகளில் மாணவர்களின் ஈடுபாடு குறைவான நிலையில் இருப்பதாக ஆசிரியர்களின் கருத்துக்களின் மூலம் கண்டறியப்பட்டன. அவ்வாறே ஆசிரியர்கள்,

சமூக விஞ்ஞானப் போட்டிகள் தொடர்பாக மாணவர்களை விழிப்புணர்வு செய்து வழிப்படுத்துவதும் வினைத்திறனாக இல்லை என்பது அதிபர்களின் கருத்துக்களின் மூலம் கண்டறியப்பட்டன. எனவே சமூக விஞ்ஞானப் போட்டிகள் சமூக சகவாழ்வுக்கு அவசியமானதாக இருந்த போதும் அவற்றில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் ஈடுபாடு குறிப்பிடத்தக்களவில் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்றாவது கருப்பொருளாக ‘‘விவாதம், பேச்சுப் போட்டிகள்’’ என்பது காணப்பட்டது. இதன் துணைக் கருப்பொருள்களாக தன்னம்பிக்கை, சமூக விழிப்புணர்வு, பிரச்சினை தீர்க்கும் திறன் என்பன காணப்பட்டன. இவை சமூக சகவாழ்வுக்கு அவசியமானது என்ற அடிப்படையில் தன்னம்பிக்கையை வளர்த்தல், சக வாழ்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், சமூகப் பிரச்சினைக்கு நடுநிலையாகத் தீர்வு காணல், பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளல் ஆகியன மாணவர்களிடம் வளர்க்கப்படுவதாக அதிபர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஆயினும் சமூக விஞ்ஞானப் போட்டிகளில் மாணவர்களின் ஈடுபாடு குறைவான நிலையில் இருப்பதாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்களின் மூலம் கண்டறியப்பட்டன. எனவே விவாதம், பேச்சுப் போட்டிகள் சமூக சகவாழ்வுக்கு அவசியமானதாக இருந்த போதும் அவற்றில் மாணவர்களின் ஈடுபாடு குறிப்பிடத்தக்களவில் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நான்காவது கருப்பொருளாக ‘‘தேசிய விழாக்கள் மற்றும் சர்வதேச தினங்கள்’’ என்பது காணப்பட்டது. இதன் துணைக் கருப்பொருள்களாக சமூக நல்லிணக்கம், பண்பாட்டு புரிதல், ஒற்றுமை என்பன காணப்பட்டன. இவை சமூக சகவாழ்வுக்கு அவசியமானது என்ற அடிப்படையில் மாற்றுக் கலாசாரத்தை மதித்தல், பிரதேச மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல், பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளல் ஆகியன மாணவர்களிடம் வளர்க்கப்படுவதாக அதிபர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஆயினும் தேசிய விழாக்கள் மற்றும் சர்வதேச தினங்கள் பாடசாலைகளில் பெயரளவில் மாத்திரம் நடைபெறுவதனால் மாணவர்களிடம் இப் பண்புகள் வளர்க்கப்படுவது குறிப்பிடத்தக்களவில் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்தாவது கருப்பொருளாக ‘‘கல்விச் சுற்றுலா’’ என்பது காணப்பட்டது. இதன் துணைக் கருப்பொருள்களாக ஒத்துழைப்பு, பண்பாட்டு அனுபவம் மற்றும் சமூக இணைவு என்பன காணப்பட்டன. இவை சமூக சகவாழ்வுப் பண்பை மாணவர்களிடம் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக அதிபர்களதும் ஆசிரியர்களதும் துலங்கல்கள் வெளிப்படுத்தின. ஆயினும் அதனை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் பல்வேறு சவால்கள் எதிர்கொள்ளப்படுவதாக அதிபர்களின் கருத்துக்கள் வெளிப்படுத்தின.

எனவே ஆய்வக்குட்பட்ட பாடசாலைகளில் சமூக சகவாழ்வுப் பண்பை மாணவர்களிடம் வளர்ப்பதில் குடியியற் பாடத்துடன் தொடர்புடைய இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் போதிய பங்களிப்பை வழங்கவில்லை என்பது அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் தரவுகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## கண்டறிதல்களும் கலந்துரையாடல்களும் (Findings and Discussion)

இவ்வாய்வானது தென்மராட்சிக் கிழக்குப் பிரதேச வகை II பாடசாலைகளின் தரம் 10 மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் பங்களிப்பினை மூன்று முக்கிய குறிக்கோள்களின் அடிப்படையில் ஆராய்ந்துள்ளது. அவற்றின் அடிப்படையில் பின்வரும் கண்டறிதல்களும் கலந்துரையாடல்களும் முன்வைக்கப்படுகின்றன.

***சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாட விடயங்களின் பங்களிப்பு***

***1. சட்ட மற்றும் பண்பாட்டு ரீதியான கடமைகளின் பங்களிப்பு.***

குடியியற் பாடத்திலுள்ள அடிப்படைக் கடமைகள், ஏனையவர்களின் உரிமைகளை மதித்தல் ($M$ = 5.00, $SD$ = 0.01) மற்றும் ஒழுக்கத்தைப் பேணுதல் ($M$ = 4.80, $SD$ = 0.41) போன்ற சட்ட மற்றும் பண்பாட்டு மாறிகள் மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் மிகவும் உயர்வான பங்களிப்பை ($M$ = 4.21 - 5.00) வழங்கியுள்ளன. ஆசிரியர்களின் கருத்துக்கள் இதில் மிகவும் ஒருமித்துக் காணப்படுகின்றன ($SD$ = 0.00 - 0.50).

***2. சமூக நிறுவன மற்றும் ஜனநாயக விழுமியங்களின் பங்களிப்பு.***

பாடசாலையில் பிற மத மாணவர்களுடன் இணைந்து செயற்படுதல் ($M$ = 4.72), முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்தல் ($M$ = 4.65) போன்ற மாறிகள் மூலம் சமூக நிறுவன மற்றும் ஜனநாயக விழுமியங்கள் சார்ந்த கடமைகளும் மிகவும் உயர்வான பங்களிப்பினை நல்கியுள்ளன எனத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

***சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடக் கற்பித்தல் அணுகுமுறைகளின் பங்களிப்பு***

***1. வகுப்பறைக் கவிநிலை மற்றும் மதிப்பீடுகள்.***

குடியியற் பாடம் நடைபெறும் வகுப்பறைச் செயற்பாடுகள் ஜனநாயக ரீதியில் இடம்பெறுதல், ஒத்துழைப்புக்கு முக்கியத்துவமளித்தல் போன்ற வகுப்பறைக் கவிநிலை மாறிகள் மாணவர்களிடமும் ($M$ = 4.21 - 5.00) ஆசிரியர்களிடமும் ($M$ = 4.21 - 5.00) மிகவும் உயர்வான பங்களிப்பைக் காட்டியுள்ளன. அதேபோல, பிறருக்கு உதவுதலை மதிப்பிடல் போன்ற பாடத்தின் போதான மதிப்பீடுகளும் உயர்வான பங்களிப்பை வழங்கியுள்ளன.

***2. மாணவர் மையக் கற்பித்தல்.***

குழு வேலைகள், விவாதங்கள், பாத்திரமேற்று நடித்தல் மற்றும் களப் பயணங்கள் ஆகிய மாணவர் மையக் கற்பித்தல் முறைகள் சமூக சகவாழ்வை வளர்ப்பதில் மிதமான பங்களிப்பினை மட்டுமே வழங்கியுள்ளன என மாணவர் மற்றும் ஆசிரியர் துலங்கல்களின் சராசரிப் பெறுமதி ($M$ = 2.61 - 3.40) சுட்டிக்காட்டுகின்றது.

***சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாட இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் பங்களிப்பு***

மாணவர் நாடாளுமன்றம், சமூக விஞ்ஞானப் போட்டிகள், விவாதங்கள், தேசிய விழாக்கள் மற்றும் கல்விச் சுற்றுலா போன்ற செயற்பாடுகள் கோட்பாட்டு ரீதியாக சமூக நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை வளர்க்க அவசியமானவையாக இருந்தாலும், ஆய்வுப் பிரதேசப் பாடசாலைகளில் அவை போதிய பங்களிப்பை வழங்கவில்லை. மாணவர்களின் குறைவான ஈடுபாடு, ஆசிரியர்களின் அக்கறையின்மை மற்றும் தொடர்ச்சியாக இவற்றை நடாத்துவதில் உள்ள பல்வேறு சவால்கள் காரணமாக இவை வெறும் பெயரளவில் மட்டுமே இடம்பெறுவதாக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் நேர்காணல் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல் (Discussion)

இக் கண்டுபிடிப்புகள் Perera (2021) இன் ஆய்வு முடிவுடன் ஒத்துப் போகின்றன. இலங்கையின் கல்வி முறையானது அதிகளவில் பரீட்சைகளை மையமாகக் கொண்டுள்ளதால், குடியியல் போன்ற பாடங்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் சமூக நற்பண்புகளும் நடத்தைசார் மாற்றங்களும் மாணவர்களிடையே முழுமையாகச் சென்றடைவதில்லை என்பது இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஆலோசனைகள் (Recommendations)

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், மாணவர்களிடையே சமூக சகவாழ்வை நடைமுறை ரீதியாக வளர்த்தெடுப்பதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

***மதிப்பீட்டு முறையில் மாற்றம்***

குடியியல் பாடத்திற்கு வெறும் எழுத்துப் பரீட்சைக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்காமல், மாணவர்களின் சமூகப் பங்களிப்பு, குழு வேலைகள் மற்றும் சகிப்புத்தன்மை போன்ற பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலை சார் மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

***விழுமியப் பதிவேட்டு முறை***

ஒவ்வொரு மாணவனும் சமூக சகவாழ்வு தொடர்பாகச் செய்யும் நற்செயல்களைப் பதிவு செய்யும் "விழுமியப் பதிவேட்டு முறை" (Value Log Record) அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்குப் பரீட்சைப் புள்ளிகளில் ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும்.

***பிரதேச வளங்களைப் பயன்படுத்துதல்***

பாடசாலைகளில் நிதி மற்றும் கட்டிட வசதிகள் குறைவாக இருக்கும் பட்சத்தில், அருகிலுள்ள வழிபாட்டுத் தலங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் சமூகப் பெரியார்களைக் கற்றல் வளங்களாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**செயற்பாடுசார் கற்றல்**

பரீட்சைக்காகப் பாடங்களை மனனம் செய்ய வைக்காமல், சமூக முரண்பாடுகளை அமைதியான முறையில் தீர்க்கும் வகையிலான பாத்திரமேற்று நடிக்கும் நாடகங்களை (Role-play) வகுப்பறைகளில் அரங்கேற்றுவதன் மூலம் மாணவர்களின் உணர்வுபூர்வமான ஈடுபாட்டை அதிகரிக்கலாம்.

***ஜனநாயக வகுப்பறைச் சூழல்***

ஆசிரியர் மையக் கற்பித்தலிலிருந்து விலகி, மாணவர்கள் தங்களுக்குள்ளே சமூகப் பிரச்சினைகள் குறித்து விவாதித்துத் தீர்மானங்களை எடுக்கும் பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயக வகுப்பறைச் சூழலை உருவாக்க வேண்டும்.

## ஆய்வு முடிவு (Conclusion)

இவ்வாய்வின் முடிவின்படி, தென்மராட்சிக் கிழக்குப் பிரதேச வகை II பாடசாலைகளில் தரம் 10 மாணவர்களிடையே சமூக சகவாழ்வை வளர்ப்பதில் குடியியற் பாடத்தின் பாடவிடய உள்ளடக்கங்கள், சட்ட, பண்பாட்டு ரீதியான கடமைகள் மற்றும் வகுப்பறைக் கவிநிலை ஆகியன மிகவும் உயர் மட்டத்திலான பங்களிப்பை வழங்கியுள்ளன. இருப்பினும், கல்வி முறையிலுள்ள பரீட்சை நோக்கிய கட்டமைப்புக் காரணமாக, மாணவர் மையக் கற்பித்தல் முறைகள் மிதமான பங்களிப்பையே வழங்கியுள்ளன. மேலும், மாணவர்களின் சமூக சகவாழ்வுப் பண்புகளை நடைமுறை ரீதியாகப் பலப்படுத்த வேண்டிய இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் (மாணவர் நாடாளுமன்றம், போட்டிகள், விழாக்கள்) போதிய திட்டமிடல் மற்றும் ஈடுபாடின்மையால் தகுந்த பங்களிப்பை வழங்கத் தவறியுள்ளன.

எனவே, குடியியற் கல்வியை வெறும் ஏட்டுக்கல்வியாக மாத்திரம் வைத்திருக்காமல், ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்டவாறு விழுமியப் பதிவேடுகள் மற்றும் செயற்பாடுசார் கலைத்திட்ட நடைமுறைகள் மூலம் சமூக நிறுவன கற்றலாக மாற்றியமைக்கும் போது மட்டுமே, பல்லினப் பண்பாட்டு இலங்கையில் நிலையான சமாதானத்தையும் சமூக சகவாழ்வையும் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்க முடியும்.

**உசாத்துணைகள்**

Delors, J. (1996). Learning: The treasure within: Report to UNESCO of the International Commission on Education for the Twenty-first Century. UNESCO Publishing. https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000102734

Durkheim, E. (1964). The division of labour in society. Free Press. https://ia601408.us.archive.org

Kamlasi, A. Y., & Kusdarini, E. (2022). Pendidikan kewarganegaraan berbasis multikultural dalam penguatan sikap toleransi siswa SMA. *Jurnal Ilmiah Pendidikan Pancasila dan Kewarganegaraan, 7(3),* 620–629.

Lewin, K. M. (2021). Education and social change in Sri Lanka. https://www.researchgate.net/publication/345999287

National Council of Educational Research and Training. (2016). Civics: Social and political life. NCERT. https://ncert.nic.in/textbook/pdf/hess3ps.pdf

OECD. (2011). Perspectives on global development: Social cohesion in a shifting world. OECD Publishing. https://www.oecd.org/en/publications

Perera, G. (2021). Exploring the barriers in developing social innovation and sustainopreneurship in Sri Lanka. https://www.researchgate.net/publication/355346360

Subramaniam, S. V. (2024). Social capital and health. In I. Kawachi, S. V. Subramanian, & D. Kim (Eds.), Social capital and health (pp. 1–26). Springer. https://link.springer.com/chapter/10.1007/978-0-387-71311-3_1

United Nations Human Rights Council. (2023). Report on human rights and social reconciliation in Sri Lanka. United Nations Human Rights Council. https://www.ohchr.org

United Nations Development Programme Sri Lanka. (2021–2023). Annual reports on social cohesion and sustainable development. United Nations Development Programme. https://www.undp.org

UNESCO. (2015). Global citizenship education: Topics and learning objectives. United Nations Educational, Scientific and Cultural Organization. https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000232993

World Bank. (2021). Sri Lanka development update: Economic and social impacts. World Bank Group. https://documents1.worldbank.org

சமூக நீதி மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு. (2011). *கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை,* இலங்கை அரசாங்கம்.